எடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக ஒரு குடும்பத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுவதைவிட, அந்தக் குற்றத்தைச் செய்வதற்கு யார் தூண்டுகோலாக இருந்தார்களோ, யார் காரணமாக இருந்தார்களோ அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சில நேரங்களிலே மாமனார், மாமியார் போன்றவர்கள் இந்தக் கொலைக் குற்றங்களுக்குக் காரணமாக இருக்கிறார்கள். பெற்ற தாய்மார்களே அதை கண்டுபிடித்து காவல்துறை அதிகாரிகளிடத்திலே புகார்களைக் கொடுக்கும்போது குறிப்பிட்டு பெயர்களைச் சொல்லியே கொடுக்கின்ற காரணத்தினால் அரசு சிரமமில்லாமல் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை எடுத்து வருகின்றது. இந்தக் கொலைக் குற்றங்களைச் செய்வதற்குத் தூண்டுகோலாக இருப்பவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதன் மூலமாக மட்டும் இதைத் தடுத்துவிட முடியும் என்று அரசு கருதவில்லை. இதற்கு, தகுந்த முறையில் விழிப்புணர்ச்சி ஊட்டக்கூடிய வகையில் அவர்களுக்கு பல்வேறு பிரச்சாரங்களை இன்றைக்கு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாகவும் நம்முடைய தமிழகத்தின் பெண் சட்டமன்ற உறுப்பினர் மூலமாகவும் அரசு செய்து வருகிறது. இதற்கு யூனிசெஃப் நிறுவனம் மிகப்பெரிய உதவியாக இருந்து இந்தப் பிரச்சாரத்திற்கு ஆகின்ற செலவுகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு இன்றைக்கு இந்தக் காரியத்தை முழுமையாகச் செய்கின்ற காரணத்தினால், சேலத்தில் கடந்த 4 மாதங்களாக பெண் சிசு கொலை அறவே இல்லை என்று சொல்லுகின்ற சூழ்நிலை இன்றைக்கு உருவாகிக்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 131, திரு. பி. வி. இராஜேந்திரன் இருக்கையில் இல்லை. இந்தக் கேள்வி இராமநாதபுரம் மாவட்டத்தைப்பற்றியதால், டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள் கேட்பார்கள். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

131–

இராமநாதபுரத்தில் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதியின் திருவுருவச் சிலை அமைத்தல்.

*10501–**திரு. பி.வி. இராஜேந்திரன்:***

1994 ஜனவரி 3]

மாண்புமிகு செயதி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

24 ஆண்டுகாலம் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் சிறைப்பட்டு அங்கேயே இறந்துபோன விடுதலை போராட்ட வீரர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதியின் திருவுருவச் சிலையை இராமநாதபுரத்தில் நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்களையும் சுதந்திரப் போராட்ட வீரர்களையும் மதித்து பென்ஷனை அதிகரித்துக் கொடுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், இறந்துபோன இந்த விடுதலைப் போராட்ட வீரர் முத்துராமலிங்க சேதுபதியின் திருவுருவச் சிலையை இராமநாதபுரத்தில் நிறுவுவதற்கு மீண்டும் பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டுக்கு உழைத்த நல்லவர்களை மக்கள் மனதிலே நிலைக்க வைக்கின்ற அரசாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு செயல்பட்டுவருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று கூறியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேசமயம் முத்துராமலிங்க சேதுபதி வாரிசுகளுக்கு பென்ஷன் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கவனத்தில் எடுத்து பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 132, திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் இருக்கையில் இல்லை. வினா எண் 133, திரு. வி.கே. லட்சுமணன் இருக்கையில் இல்லை. வினா எண் 134, திரு. செ.து. வரதராஜன்; மாண்புமிகு கல்வி அமைச்சர்.*